திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், அரசாங்கம் மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிற கடிதத்தில் இந்த ஐலண்ட் கிரவுண்ட் சென்னையின் சுவாசப்பை என்று குறிப்பிட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கடிதம் எழுதி 3, 4 மாதங்கள் ஆனதால் வாசகங்கள் சரியாக ஞாபகம் இல்லை. ஆனாலும் சுவாசப் பையாக இருக்கிறது என்ற அந்தக் கருத்து அந்தக் கடிதத்திலே எழுதப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவரவர்களே, தலைமைச் செயலகத்திற்கு முன்புள்ள இடத்தில பூங்கா அமைகக்ப் பட்டிருக்கிறது. சுத்தப்படுத்த வேண்டும், அழகாக இருக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சரவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு மத்திய இராணுவ நிர்வாகம் தலையிட்டு இதைப் பூங்காவாக அமைக்கக்கூடாது என்று தெரிவித்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அமைக்கக்கூடாது என்று தெரிவிக்கவில்லை. அங்கே அமைப்பதற்கும், அங்கே இருக்கின்ற புல் பூண்டுகளை அகற்றுவதற்கும் மத்திய இராணுவ நிர்வாகத்தின் அனுமதி பெற வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதற்காக எழுதிய கடிதத்திற்குப் பதில் இல்லை. பிறகு இராணுவத் துறையைச் சேர்ந்த முன்னாள் உதவி அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்தபொழுது அவர்களை அழைத்து வந்து காட்டினோம். அதற்குப் பிறகு அவர்கள் டெல்லிக்குச் சென்றார்கள். அதற்குப்பிறகு 2, 3 ஞாபகக் கடிதங்கள் எழுதிய பின்னர் ஒப்புதல் கிடைத்து புல் பூண்டுகள் செதுக்கப்பட்டன.

Visit of Hon. Minister to Government Press

* 121 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether he visited the Government Press on or about 6th October, 1970; and

(*b*) if so, what his findings are?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :

(அ) ஆம். 5—10—1970-ஆம் நாளன்று அண்ணா சாலையிலுள்ள அரசுப் பாடப் புத்தக அச்சகத்திற்குச் சென்று பார்த்தேன்'

(இ) பொதுவாக மன நிறைவு அளிக்கும் வகையில் அச்சகம் செயல்படுவதை அறிந்தேன். என்றாலும்கூட மேலும் திறமை யாகச் செயல்பட்த் தேவையான உத்தரவுகளைப் பிறப்பித்தேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இந்த அச்சகத்தை விரிவுபடுத்தவும், இந்த அச்சகத்திலுள்ளவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் அரசின் ஆலோசனை உண்டா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அதைப்பற்றி ஆலோசனையில் இருந்து வருகிறது.